# பரிசோதகர் அறிக்கை

## மட்டம் 1 பரீட்சைகள் - யூலை 2022

## (103) பொருளியல்

பெரும்பாலான பரீட்ச்சார்த்திகளால் பொருளியல் வினாத்தாளிற்கு விடையளிப்பது அளவு ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் இருப்பதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இருப்பினும் முழுவதுமாக எடுத்துப்பார்க்கும் பொழுது சில வினாக்களுக்கு கணிசமான எண்ணிக்கையான மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் விடையளிக்கவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஆய்வின் போது பின்வரும் பிரதான அவதானிப்புக்கள் பரிசோதகரால் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது :

## பகுதி A

**வினா இல. 01**

இந்த பிரிவு பொருளியலின் ஒட்டுமொத்த பாடத்திட்டத்தின் பரந்த நோக்கினையும் கொண்டமைந்துள்ளது. இந்த பிரிவு அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

1.1 முதல் 1.10 வரையான வினாக்கள் கொடுக்கப்பட்ட விடைகளிலிருந்து சரியான பதிலை தேர்ந்தெடுக்க வேண்டும். வினா 1.11 மற்றும் 1.12, கொடுக்கப்பட்ட 2 விடைகளில் சரியான விடையினை தெரிவு செய்ய வேண்டும். வினா 1.13 முதல் 1.15, கொடுக்கப்பட்ட கூற்று சரியா அல்லது தவறா என குறிப்பிட வேண்டும். 1.15 முதல் 1.20 வினாக்களுக்கான சுருக்கமான விடையினை விடைத்தாளில் குறிப்பிட வேண்டும்.

**1.1** பொருளாதார வளம் மற்றும் பொருளாதாரமற்ற வளங்கள் மீதான அறிவினை சோதிப்பதற்காக வினவப்பட்டது: பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருளாதாரமற்ற வளமாக ‘‘சூரிய ஒளி’’ என சரியான விடையினை குறிப்பிட்டு இரண்டு புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**1.2** நுகர்வோர் நடத்தை மற்றும் சந்தை தொடர்பான விளக்கத்தினை அளவிடுவதற்கு, இருப்பினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் முதலாவது விடையான ‘‘ பிரதியீட்டுப் பொருட்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு’’ இனை சரியான விடையாக தெரிவு செய்துள்ளனர். சில பரீட்சார்த்திகள் மட்டும் விபரிக்க முடியாதபடி நான்காவது விடையான ‘‘குறை நிரப்புப் பொருட்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு’’ எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**1.3** இவ்வினாவானது மேலுள்ள வினாவினை ஒத்ததாகும். புரிட்சார்த்திகள் அடிக்கடி தவறிழைக்கும் வினாவாகும். முதல் விடையான ‘‘பூரண நெகிழ்ச்சியற்றது’’ என்பது சரியான விடையாகும்.

**1.4** உற்பத்தி செயற்பாடு தொடர்பான அறிவினை சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையான இரண்டாவது விடையினை தெரிவு செய்து புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**1.5** செயற்பாட்டு அறிவினை வளர்ப்பதற்காக மத்திய வங்கி அறிக்கை, நூல்கள், மற்றும் ஏனைய புத்தகங்களை வாசிக்காத மாணவர்கள் தவறான விடையினை தெரிவுசெய்துள்ளனர். மாறாக இலங்கை மத்திய வங்கி அறிக்கையினை வாசித்த மாணவர்கள் 2021 இன் இலங்கையின் தலாவருமானம் 3,815 அமெரிக்க டொலர் என சரியாக குறிப்பிட்டு புள்ளிகளை பெற்றுள்ளனர்

**1.6** இவ்வினாவானது உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தித் தொழிற்பாடுகள் தொடர்பான அறிவினை சோதிப்பதற்கு வழங்கப்பட்ட வினாவாகும். இவ்வினாவிற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டாவது விடையினை சரியான விடையாக தெரிவுசெய்து புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**1.7** இவ்வினாவானது வேறுபட்ட சந்தைகளின் பண்புகள் தொடர்பான விளக்கத்தை சோதிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளது, பெரும்பாலான பரீட்சார்த்திகள் 3 வது விடையினை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் 01வது விடையான ‘‘தடையற்ற உள்நுழைவும் வெளியேறுகையும்’’ என தவறுதலாக குறிப்பிட்டுள்ளர்.

**1.8** இவ்வினாவானது நுண்பாகப் பொருளியல் கோட்பாடு தொடர்பான அறிவினை சோதிப்பதற்கு வழங்கப்பட்ட வினாவாகும். இவ்வினாவிற்கான சரியான விடை இல 03 ஆகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான விடையினை குறிப்பிட்டதோடு புள்ளிகளை பெறவில்லை.

**1.9** பண நிரம்பல் தொடர்பான விளக்கத்தை சோதிப்பதற்கு வழங்கப்பட்ட வினாவிற்கு பல பரீட்சார்த்திகள் தவறான விடையினை கொடுத்ததோடு இவ்வினாவிற்கான புள்ளிகளை பெறவில்லை.

**1.10** பயன் கோட்பாடு தொடர்பான அறிவினை சோதிக்கும் இவ் வினாவிற்கு பரீட்சார்த்திகள் தவறான விடையினை வழங்கியுள்ளனர். இதை பார்க்கும் போது பரீட்ச்சார்த்திகளுக்கு பயன் தொடர்பான அறிவு குறைவாக காணப்படுகின்றது. ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே நான்காவது விடையினை சரியான விடையாக தெரிவு செய்துள்ளனர்.

**1.11** வணிக பொருளியலின் கீழ் வேறுபட்ட பொருளாதார முறைகளின் விளக்கத்தை அளவிட கொடுக்கப்பட்ட கேள்விக்கு பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை தெரிவு செய்து புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

**1.12** உற்பத்தி தொடர்பான விளக்கத்தை அளவிடுவதற்கு கொடுக்கப்பட்ட வினாவாகும். பல மாணவர்கள் எல்லை உற்பத்தியினை சரியான விடையாகத் தெரிவு செய்து புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

**1.13** சந்தை மற்றும் நுகர்வோர் நடத்தை தொடர்பான அறிவினை சோதிப்பதற்கு வழங்கப்பட்ட இவ்வினாவிற்கு சில மாணவர்கள் புத்தகத்தை சரியாக வாசித்து சரியான பதிலை எழுதுவதற்கு தயாராகவில்லை என்பதை காட்டுகின்றது. தரப்பட்ட கூற்று தவறாக இருப்பினும் சில பரீட்சார்த்திகள் சரியா தவறா எனக் குறிப்பிட மறந்துள்ளனர்.

**1.14** தரப்பட்ட கூற்று சரியாக இருந்த போதிலும், பல பரீட்சார்த்திகள் தவறான விடையினை குறிப்பிட்டுள்ளனர். இவை குறுங்கால உற்பத்தி தொடர்பான குறைவான அறிவினைக் காட்டுகின்றது.

**1.15** உற்பத்திக்காரணிகள் தொடர்பான அறிவினை சோதிக்கும் நோக்கினை இவ்வினா கொண்டுள்ளது. சில பரீட்சார்த்திகள் சரியான விடையினையும் சில பரீட்சார்த்திகள் தவறான பதிலாக மூலனம்

வட்டியினை ஈட்டுவதோடு மூலதனத்திலிருந்து வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**1.16** பல பரீட்சார்த்திகள் அரச பற்றாக்குறை பாதீட்டுக்கு சரியான விடையை வழங்கியுள்ளனர். ஆனால் சில மாணவர்கள் சரியான விளக்கமின்றி தவறான பதிலினையும் வழங்கியுள்ளனர்.

**1.17** பல பரீட்சார்த்திகள் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட விலைக்கட்டுப்பாட்டுக்கு சரியான விடையை வழங்கியுள்ளனர். இருப்பினும் சில மாணவர்கள் ஏகபோகத்தை கட்டுப்படுத்தல் மற்றும் உற்பத்தியாளர்களின் கேள்வியினை கட்டுப்படுத்தல் என தவறான பதிலினையும் வழங்கியுள்ளனர்.

**1.18** பணத்தின் கேள்விக்கான நோக்கம் தொடர்பான விளக்கத்தை அளவிடுவதற்கு கொடுக்கப்பட்ட வினாவாகும். சில மாணவர்கள் திரவத்தன்மையை பேணுவதற்கான எளிய முறை எனத் தவறான விடையினை குறிப்பிட்டுள்ளனர். சரியான விடை, கொடுக்கல்வாங்கல் நோக்கம், முன்னெச்சரிக்கை நோக்கம் மற்றும் ஊக நோக்கம் ஆகும்.

**1.19** வணிகத்தின் உற்பத்தி தொழிற்பாடுகள் தொடர்பான அறிவினை அளவிடுவதற்கு கொடுக்கப்பட்ட வினாவாகும். ஒரு சில மாணவர்கள் மட்டுமே சரியான விளக்கத்துடன் விடையளித்துள்ளனர். சில மாணவர்கள் எந்தவொரு விடையும் எழுதவில்லை.

**1.20** மனித அபிவிருத்தி வரைவாக்கத்தில் ஒரு உருப்படியாக, வருமானம், கல்வி மற்றும் சுகாதாரம் என சரியான பதிலை சில மாணவர்கள் குறிப்பிட்டதோடு, சிலர் எந்தவொரு விடையும் எழுதவில்லை .

## <u>பகுதி B</u>

**வினா இல. 02**

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு சந்தர்ப்பச்செலவுக் கோட்பாடு தொடர்பாக சரியாக விடையளித்துள்ளனர்.

**(b)** பல பரீட்சார்த்திகள் கலப்பு பொருளாதாரத்தில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்த்தல் தொடர்பாக சரியான விடையினை கொடுத்து புள்ளிகளை பெற்றுள்ளனர்.

**(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தனியுரிமைச் சந்தையின் பண்புகளை சரியாக குறிப்பிட்டுள்ளனர்.

**வினா இல. 03**

**(a)** பல பரீட்சார்த்திகள் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாட்டுக்கமைய சமப்பாட்டு விலை மற்றும் தொகையினை சரியாகக் கணித்து புள்ளிகளை பெற்றுள்ளனர். குறைந்த இயற்கணிதத் தேர்ச்சியுடைய மாணவர்களால் சரியாக செய்யமுடியவில்லை ஏனெனில் சமன்பாட்டை தவறாகப் பிரதியிட்டுள்ளனர். சில மாணவர்கள் சமப்பாட்டு விலை மற்றும் தொகையினை சரியாக கணக்கிட்ட போதிலும் நுகர்வோர் மிகைக் கணிப்பீட்டை தெரிந்திருக்கவில்லை.

**(b)** சில பரீட்சார்த்திகள் குறைந்தபட்ச விலையொன்றை நிர்ணயிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கான நேரடி விடையினை மிகத் தெளிவாக குறிப்பிட்டபோதிலும் சில மாணவர்கள் உயர்ந்தபட்ச விலையிலிருந்து குறைந்தபட்ச விலைக்கான பொருளாதார விளைவுகளை குறிப்பிட்டுள்ளனர்.

**வினா இல. 04**

**(a)** பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக பதிலளித்திருந்த போதிலும், இவ்வினாவின் நோக்கமானது விலைமட்டம், பணவீக்கம், விலைச்சுட்டெண் தொடர்பான அறிவினை பரீட்சிப்பதாகும். சில பரீடசார்த்திகள் பூரணமாக தொடர்பற்ற விடையினை வழங்கியிருந்தனர்.

**(b)** இவ்வினாவில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கையின் தரம் சார்ந்த கட்டுப்பாடுகள் கேட்கப்பட்டுள்ளதுடன் விடைகள் வெற்றிகரமாக எழுதப்படவில்லை. அரச கடன் முகாமைத்துவ திட்டம் மற்றும் நாணயக் கொள்கை தொடர்பாக தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன.

**(c)** பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு இலங்கையின் நாணயக் கொள்கையை இறுக்குவதற்கு மத்திய வங்கி எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக சரியான தொடர்புடைய விடைகள் குறிப்பிடப்படவில்லை. பல பரீட்சார்த்திகள் வங்கி வீத கொள்கை, திறந்த சந்தை செயற்பாடுகள் மற்றும் ஒதுக்க வீத கொள்கைகள் பற்றி எழுதவில்லை. ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது பெரும்பாலானோர் இந்த உப வினாவிற்கு புள்ளிகளைப் பெறுவதில் தோல்வியுற்றுள்ளனர்.

**வினா இல. 05**

**(a)** இவ்வினாவானது சர்வதேச வியாபாரம் தொடர்பான அறிவினை பரீட்சிக்க சரியான நேரத்தில் கேட்கப்பட்ட மிக முக்கியமான வினாவாகும். நாட்டின் தற்போதய பொருளாதார நிலையினை பரீட்சிக்கும் இவ்வினாவிற்கு சில பரீட்சார்த்திகள் புள்ளிகளை பெறுவதில் தோல்வியுற்றுள்ளனர்.

சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை சரியாக செய்ய தவறியதுடன் முழுநயக் கோட்பாடு மற்றும் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை கலந்து தெளிவற்ற முறையில் எழுதியுள்ளனர். சில பரீட்ச்சார்த்திகள் கணிப்பீட்டினை வேறு எங்கோ செய்து விடையினை மட்டும் எழுதியுள்ளனர். இதனால் சில பரீட்ச்சார்த்திகள் முழுமையான புள்ளிகளை பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

**(b)** அமெரிக்க டொலரின் பெறுமதிக்கெதிரான இலங்கை ரூபாயின் பெறுமதிவீழ்ச்சி காரணமாக டொலர் ஒதுக்கங்கள் குறைவடைந்ததன் காரணமாக வெளிநாட்டுக்கடன்களை திருப்பிச் செலுத்த முடியாதுள்ளுது. இவை எழுதப்பட்ட விடையில் குறிப்பிட்டிருந்தால் பரீட்ச்சார்த்தி அதிப்படியான பண முத்திரையிடலுக்கான சூழ்நிலை தொடர்பாக விளக்கத்தை கொண்டுள்ளதாக கருதப்படும்.

பெரும்பாலான பரீட்ச்சார்த்திகள் இவ்வினாவிற்கு முழுமையான புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தது.

**(c)** பெரும்பாலான பரீட்ச்சார்த்திகள் சர்வதேச வியாபாரத்தின் நன்மைகளை வெற்றிகரமாக குறிப்பட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 05 ஆவது வினா பல பரீட்ச்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப்பெறும் வகையிலமைந்த இலகுவான வினாவாகும்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

**(A)** **(a)** தேசிய கணக்கீடு தொடர்பான கோட்பாட்டினை பரீட்சிக்கும் இவ் வினாவானது முன்னைய வினாத்தாள்களுக்கு விடையளித்த பரீட்சார்திகளுக்கு மிகவும் இலகுவான வினாவாகும். ஒவ்வொரு ஆண்டும் ஒரேமாதிரியான கேள்விகளை கேட்பதன் மூலம் அறிவு மற்றும் விளக்கங்கள் அளவிடப்படுகின்றன.

ஒவ்வொரு பரீட்ச்சார்த்தியும் 10 புள்ளிகளில் 6 புள்ளியினை பெற முயற்சிக்க வேண்டும். சில பரீட்ச்சார்த்திகள் உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரியினை உற்பத்தி மீதான தேறிய வரியுடன் குழப்பமடைகின்ளனர். கணிப்பீட்டு தவறு மற்றும் கூட்டல் வழு காரணமாக சில மாணவர்கள் புள்ளிகளை பெறுவதில் தோல்வியடைகின்றனர்.

**(b)** பல பரீட்ச்சார்த்திகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளுக்கு வெற்றிகரமாக பதிலளித்துள்ளனர்

உ-ம் : கட்டனம் அறவிடப்படாத, உள்நாட்டு சேவைகள்.

இலவசமாக பெறப்பட்ட இயற்கை வழங்கள் (காணி, நீர், காற்று)

**(B)** பல பரீட்சார்த்திகள் வருமானத்தின் நியாயமான பகிர்வு மற்றும் பூரண தொழில்களுக்கிடையிலான வித்தியாசத்தை சரியாக குறிப்பிட்டுள்ளனர். சில பரீட்சார்திகள் பூரண தொழில் என்பது அனைத்து வேலை தேடுபவர்களும் நாட்டில் வேலைக்கமர்த்தப்படும் நிலை என தவறாக நம்புகின்றனர்.

**(C)** சில பரீட்சார்த்திகள் வளங்களின் அதிகரிப்பு, வள உற்பத்திதிறன் அதிகரிப்பு, பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை போன்ற காரணிகளை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்களாக சரியாக குறிப்பிட்டுள்ளனர். சில பரீட்சார்திகள் தொடர்பற்ற சிலவற்றை எழுதியுள்ளனர். ஒட்டுமொத்தமாக பெரும்பாலான பரீட்சார்திகள் இவ்வினாவிற்கு சிறந்த புள்ளிகளை பெற்றுள்ளனர்

**- - -**

**<u>பரீட்சார்த்திகளின் திறன் மட்டத்தை முன்னேற்ற கருத்தில் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புாடத்திட்டத்தை முழுமையாக கற்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கவனம் செலுத்துதல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** ''செயல் வினைச் சொல் செவ்வை நிரல்'' வரைவிலக்கணத்துடன் வினாத்தாளில் இணைக்கப்பட்டுள்ளதுடன் OTQs தவிர்ந்த ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றும் செயல் வினைச் சொல்லுடன் ஆரம்பிக்கின்றது. பரீட்சார்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் வரைவிலக்கணத்திற்கமைய வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**(4)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(5)** விடையளிக்கும் போது தேவைப்படும் அடிப்படை கோட்பாடுகளை சரியாக அடையாளம் காண்பதற்கான திறனை விருத்தி செய்தல்.

**(6)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுத வேண்டும்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** அறிவு மற்றும் அனுபவத்தினை விருத்தி செய்ய முன்னைய வினாத்தாள் மற்றும் விடைத்தாளை ஆய்வு செய்தல்.

**(9)** பொருளியல் கோட்பாடுகளின் சரியான விளக்கத்தை பெறுவதன் மூலம் ஒவ்வொரு கோட்பாடுகளுக்குமான வித்தியாசத்தை ஒப்பீடு செய்யும் திறனை வளர்தல்.

**(10)** சுரியான நோ முகாமைத்துவம் முக்கியமானது.

**(11)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(12)** நம்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் சிறந்த பெறுபேற்றுக்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -